28.03.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## நாடு முழுவதும் 5 லட்சம் பண்ணைக் குட்டைகள் அமைப்பு



நிலத்தடி நீர்மட்டம் குறைவதைத் தடுப்பதற்கு, நாடு முழுவதும் 5 லட்சம் பண்ணைக் குட்டைகளை மத்திய அரசு உருவாக்கி வருகிறது என்று பிரதமர் மோடி கூறினார்.

"மனதின் குரல்' (மன் கீ பாத்) என்ற வானொலி நிகழ்ச்சி மூலம் மாதந்தோறும் உரையாற்றி வரும் அவர், ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 27) சுமார் 30 நிமிடங்கள் பேசினார். அவர் பேசியதாவது:

விவசாயிகள் உரங்களை சரியான அளவில் பயன்படுத்த வேண்டும். அளவுக்கு அதிகமான உரங்கள், மண்ணின் வளத்தை பாதிப்புக்குள்ளாக்கும். இதனால், உரத்துக்கு செலவிடும் தொகையும் குறையும். செலவைக் குறைத்து, உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் வழிமுறைகளை விவசாயிகள் கையாள வேண்டும்.

இதுதவிர, "டிஜிட்டல் இந்தியா' திட்டம், நகர்ப்புற இளைஞர்களுக்காக மட்டுமன்றி, வேளாண் சமூகத்தினரின் நலனுக்காகவும் மத்திய அரசு கொண்டுவந்துள்ளது.

வானிலை நிலவரம், வேளாண் பொருள்களின் விலை ஆகியவை குறித்த தகவல்களை, "கிஸான் சுவிதா ஆப்' என்ற செல்லிடப்பேசி செயலி மூலம் விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம்.

எனவே, விவசாயிகள் உரங்களின் பயன்பாட்டைக் குறைத்து, தொழில்நுட்பப் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

நாட்டின் பல்வேறு இடங்களில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து காணப்படுகிறது. எனவே, அத்தியாவசியத் தேவையைக் கருதி, நீரைப் பாதுகாப்பதற்காக, சிறிய அளவிலான நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்பட வேண்டும். அதற்காக, நாடு முழுவதும் 5 லட்சம் பண்ணைக் குட்டைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழும், நீரைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அம்பேத்கர் 125-ஆவது பிறந்த தினம்: சட்டமேதை அம்பேத்கரின் பிறந்த இடமான "மவ்' கிராமம், அவர் கல்வி பயின்றபோது வசித்த லண்டன் இல்லம், அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய நாகபுரி, அவர் மறைந்த தில்லி, அலிப்பூர் சாலை இல்லம், மும்பையில் அவரது இறுதிச் சடங்கு நடைபெற்ற இடம் ஆகிய 5 இடங்களிலும் நினைவகங்கள் கட்டுவதற்கு மத்திய அரசு தீவிரம் காட்டி வருகிறது.

அம்பேத்கரின் 125ஆவது பிறந்த தினமான, வரும் ஏப்ரல் 14-ஆம் தேதி, அவர் பிறந்த கிராமத்துக்குச் சென்று, அவருக்கு மரியாதை செலுத்த இருக்கிறேன்.

இந்தியாவுக்கு வாய்ப்பு: இளையோர் உலகக் கோப்பை கால்பந்து போட்டிகள், அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெறவுள்ளன. சர்வதேச அளவில் நடைபெறவுள்ள அந்தப் போட்டிகளை நடத்துவதற்கு இந்தியாவுக்கு மாபெரும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

வரப்போகும் கோடை விடுமுறையில் மாணவர்கள் தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். மக்கள் நீரிழிவு நோயை வெல்ல வேண்டும்; காசநோயை ஒழிக்க வேண்டும் என்று மோடி கூறினார்.

இதனிடையே, நாடு முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் காசநோய் பரிசோதனை செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்படும் என்று மத்திய சுகாதாரத் துறை ஜே.பி.நட்டா கூறினார்.

## ஏரிகளில் குறையும் நீர் மட்டம்

கோடைக்காலம் தொடங்கியுள்ள நிலையில் ஏரிகளின் நீர்மட்டம் குறைந்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
தற்போது பயிரிட்டுள்ள விவசாயிகள் அவை வளர்வதற்குள் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுமோ என்றும் அஞ்சத் தொடங்கியுள்ளனர். கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் கடும் மழை பொழிந்தது. இதனால் ஏரிகளில் நீர் நிரம்பியது. ஆனால் ஏரிகளில் இருந்த நீர் முறையாக பயன்படுத்தப்படவில்லை. பல ஏரிகளில் மதகுகள் சரியில்லாமல் நீர் வெளியேறிய வண்ணம் இருந்தது. அதேபோல் சிலர் ஏரிகளைத் திறந்து முறையாக மூடாமல் இருந்துவிட்டனர். இதனால் ஏரிகளில் நீர் மட்டம் சரிந்தது.
தற்போது கோடை வெயில் தொடங்கி விட்டதால் சில ஏரிகளில் நீர் முற்றிலும் வற்றிய நிலையிலும் உள்ளது. இதனால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.
அதிகளவில் மழை பொழிந்தும் தண்ணீரை முறையாக தேக்கி வைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

## அத்திக்கடவு-அவிநாசி திட்ட ஆலோசனைக் கூட்டம்

அத்திக்கடவு-அவிநாசி திட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடுவச்சேரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு நடுவச்சேரி சென்னியப்பன் தலைமை வகித்தார். ஒருங்கிணைப்பாளர்கள் அம்பலவாணன், ராமச்சந்திரன், பொன்னுக்குட்டி, விஷ்னு வெங்கடாசலம், வேலு, நவீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சின்னேரிபாளையம் வேலுசாமி. பிரபாகரன், சம்பத், ராமசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதில், வடுகபாளையம், நடுவச்சேரி, புஞ்சைத் தாமரைக்குளம், குப்பாண்டம்பாளையம், சின்னேரிபாளையம், துலக்கமுத்தூர், அய்யம்பாளையம் உள்ளிட்ட கிராமங்களில் போராட்டக் குழு அமைக்கப்பட்டது.

மேலும், அத்திக்கடவுத் திட்டம் நிறைவேற ஏப்ரல் 14 (சித்திரை 1) மேட்டுப்பாளையம் வனபத்ரகாளியம்மன் கோயிலில் அத்திக்கடவு நீரெடுத்து சிறப்பு பிரார்த்தனை செய்வது, கிராமந்தோறும் போராட்டக் குழு அமைப்பது என்பன உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.45, சென்னையில் ரூ.3.45. கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த கறிக் கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.80, முட்டைக் கோழி கிலோ ரூ.60.

## கொங்கணாபுரத்தில் ரூ.75 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

கொங்கணாபுரத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் விற்பனைச் சங்கத்தில் சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் 4,108 பருத்தி மூட்டைகள் ரூ.75 லட்சத்து 20 ஆயிரத்துக்கு ஏலம் மூலம் விற்பனையானது.

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கிளை கொங்கணாபுரத்தில் உள்ளது. இந்த விற்பனைச் சங்கத்தில் சனிக்கிழமைதோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. பருத்தி வரத்து அதிகமாக உள்ள நாள்களில் வெள்ளி, சனி, ஞாயிறு என மூன்று நாள்களும் ஏலம் நடைபெறும். இந்த வாரம் பருத்தி மூட்டைகள் குறைவாக ஏலத்துக்கு வந்ததால் சனிக்கிழமை மட்டும் பருத்தி மூட்டைகள் ஏலம் நடைபெற்றது. இதில் டி.சி.எச். ரக பருத்தி 100 கிலோ மூட்டை ரூ.5,600 முதல் ரூ.6,489 வரையும், பி.டி. ரக பருத்தி 100 கிலோ மூட்டை ரூ.4,590 முதல் ரூ.4,979 வரையும் விற்பனையானது. மொத்தம் 4,108 பருத்தி மூட்டைகள் ரூ.75 லட்சத்து 20 ஆயிரத்துக்கு விற்பனையானது.

## போலி கால்நடை மருத்துவர்கள் மீது கடும் நடவடிக்கை கால்நடை மருத்துவர்கள் வலியுறுத்தல்

போலி கால்நடை மருத்துவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கால்நடை மருத்துவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

திருச்சியில் சனிக்கிழமை நடைபெற்ற அனைத்துத் துறைகள் மற்றும் சங்கங்களைச் சேர்ந்த கால்நடை மருத்துவர்கள் அடங்கிய வழிகாட்டும் குழு கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இதர தீர்மானங்கள்:

உலக கால்நடை மருத்துவர்கள் தினத்தையொட்டி வரும் ஏப்ரல் 30-ஆம் தேதி சேலம் மாவட்டம் ஏற்காட்டில் அனைத்து துறை கால்நடை மருத்துவர்களை ஒருங்கிணைத்து கொண்டாட உள்ளோம்.

கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் பெரும்பங்கு வகிக்கும் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க பல புதிய திட்டங்களை வகுத்து, இது தொடர்பான தொழில்களை மேம்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி கால்நடை வளர்ப்பை லாபகரமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இளைஞர்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட உரிய உதவிகள் செய்ய வேண்டும்.

அரசு கால்நடை மருத்துவமனைகள், அலுவலகங்களில் காலியாக உள்ள கால்நடை மருத்துவர் பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டும்.

உள்நாட்டு கால்நடை இனங்களான காங்கேயம், உம்பளச்சேரி போன்ற மாடு இனங்கள், ராஜபாளையம், சிப்பிப்பாறை, கோம்பை போன்ற நாய் இனங்களை பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக, கூட்டத்திற்கு தமிழ்நாடு கால்நடை உதவி மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் ஜி.பெரியசாமி தலைமை வகித்தார். பொதுச் செயலர் ஐ.பொன்னுசாமி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அலுவலர்கள் சங்கத்தின் தலைவர் பன்னீர்செல்வம், ஆவின் கால்நடை மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் ரத்னகுமார் உள்பட பலர் பங்கேற்றனர்.

## சிற்றாறு அணைப் பகுதியில் 86 வகை பறவையினங்கள்!

கன்னியாகுமரி மாவட்டம், சிற்றாறு அணையையொட்டிய மலைப் பகுதிகளில் 86 வகைப் பறவையினங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக, பறவை ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

இங்கு பறவைகள் சரணாலயம் அமைக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கேரள மாநிலம், எர்ணாகுளம் பகுதியைச் சேர்ந்தவர் ஷாஜகான். பிரபல பறவை ஆர்வலரான இவரது தலைமையில், முன்னோடிப் பறவை ஆர்வலர் சத்தியன் மேம்பையூர் மற்றும் ஆண்கள், பெண்கள் உள்பட 30 பேர் கொண்ட குழுவினர் சிற்றாறு அணை 2, அதையொட்டிய தனியாருக்குச் சொந்தமான காடுகளில் 2 நாள்களாக இரவும் பகலும் "பறவைக் கண்காணிப்பு' (ஆண்ழ்க் ரஹற்ஸ்ரீட்ண்ய்ஞ்) செய்தனர்.

அப்போது, 5 வகை ஆந்தைகள், அபூர்வ வகையான தேன் பருந்து, காட்டுக் கோழி, பலவகை சிட்டுக் குருவிகள், கிளிகள், கொக்குகள், மரங்கொத்திகள், புறாக்கள் உள்ளிட்ட 86 வகைப் பறவையினங்களைக் கண்டறிந்துள்ளனர்.

இதுகுறித்து ஷாஜகான் செய்தியாளர்களிடம் கூறியதாவது: நான் இந்தியா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் பறவைகளைக்

கண்காணித்து வருகிறேன். இந்தியாவில் மொத்தம் 1,400-க்கும் அதிகமான பறவையினங்கள் உள்ளன. அவற்றில், 120 வகைகள் அழியும் தருவாயில் உள்ளன.

தமிழகம், கேரளத்தில் சுமார் 500 வகைப் பறவையினங்கள் உள்ளன. இவற்றில் 20 முதல் 30 வகைப் பறவைகள் அழியும் நிலையில் உள்ளன. வனங்கள் அழியும்போது பறவைகளும், விலங்கினங்களும் அழிகின்றன. நாம் அவற்றின் இடங்களை ஆக்கிரமித்துவிட்டு, அவை தாக்கும்போது அவற்றை அழிக்க முயல்கிறோம். இவ்வாறு செய்தால் இன்னும் சில ஆண்டுகளில் பறவையினங்களும், விலங்கினங்களும் அழிந்துவிடும். குறிப்பாக, பறவையினங்கள் அழிந்துவிடும். தமது தலைமுறைக்கு பறவைகளை வெறும் படமாகக்தான் காட்டும் அவலநிலை ஏற்படும்.

பறவைகளாலும் உணவு உற்பத்தி அதிகரிக்கிறது. என்னாலும் ஒரு பறவையைக் காப்பாற்ற முடியும் என, ஒவ்வொரு தனி மனிதனும் எண்ண வேண்டும். பிற உயிரினங்களுக்காக வாழ வேண்டும். ஒவ்வொருவரும் பறவைகளுக்காக வீட்டுத் தோட்டத்தில் பழ மரங்களை நட வேண்டும். வீட்டருகே சிறிய தொட்டிகளில் தண்ணீர் வைக்க வேண்டும்.

இங்கு சில வாரங்களுக்கு முன்பு தமிழகப் பறவை மனிதர் பால்பாண்டியனுடன் வந்து பறவைகளைக் கண்காணித்தேன். இப்போது, இரவிலும் கண்காணிக்கும் வகையில் குழுவாக வந்துள்ளோம். ஆச்சரியமூட்டும் வகையில் 86 பறவையினங்களை எங்கள் குழுவினர் படம் பிடித்துள்ளனர். இவற்றில் பல பறவைகள் அபூர்வமானவை. மேலும் அவை இடம்பெயரும் பறவைகள். இங்கு இசைப் பறவைகள் அதிகமாக உள்ளன. 5 வகை ஆந்தைகள் உள்ளன. பலவகை சிட்டுகள், மரங்கொத்திகள், கொக்குகள், காட்டுக் கோழிகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றை அழியாமல் தொடர்ந்து காக்க வேண்டும். மேலும், இப்பகுதி பறவைகள் சரணாலயமாகவும் மாற்றப்படவேண்டும். அதற்கான முழுமையான சூழலை இங்கு உருவாக்க வேண்டும் என்றார்.

தினமலர்

# இன்றைய வேளாண் செய்திகள்

## பதநீரில் சாக்கரின் கலப்படம்

கோடையில் பதநீரின் தேவையை விட வரத்து குறைவாகஉள்ளது. பதநீரின் தேவையைச் சமாளிக்க தனியார் சிலர்சாக்கரின் கலந்த நீரை பதநீரில் சேர்க்கின்றனர். செயற்கை இனிப்பூட்டியான சாக்கரின், சுக்ரோசை விட அதிக இனிப்பானது. சாக்கரினில் ஒரு வகை உலோகச் சுவை உள்ளது. மிட்டாய்கள், சர்பத்கள், மருந்துகள், பற்பசை போன்றவற்றை இனிப்பாக்க

சாக்கரின் பயன்படுகிறது. பென்சோயிக் சல்பினைடு என்ற வேதிப்பொருளில் இருந்து சாக்கரின் தயாரிக்கப்படுகிறது.சாக்கரினில் கலோரிகள் இல்லை. சர்க்கரைக்கு மாற்றாக செயற்கை இனிப்பூட்டியாக பயன்படுத்தப்படும் சாக்கரின், வெயில்காலத்தில் பதநீரையும் விட்டு வைக்கவில்லை.

## கூடுதல் மகசூலுக்கு விதை பரிசோதனை

காஞ்சிபுரம் : 'காஞ்சிபுரம் மாவட்டத்தில், காய், கனி பயிரிடும் விவசாயிகள், அதற்கான விதைகளை பரிசோதனை செய்வது அவசியம்; அதனால், கூடுதல் மகசூல் கிடைக்கும்' என, அறிவிக்கப்பட்டுள்ளது.

விதை பரிசோதனை அலுவலர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது;சித்திரை மாதம், காய், கனி அதிகம் பயிரிடப்படும். தக்காளி, கத்திரி, மிளகாய் விதைகள் என்றால், 10 கிராம் விதையையும், தர்பூசணி, சுரைக்காய், வெண்டை, 100 கிராம் விதையையும் அனுப்பி, பரிசோதனை செய்ய வேண்டும்.பாகற்காய், புடலங்காய் போன்ற விதை, 250 கிராம் கொடுத்து, பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அதற்கான பரிசோதனை கட்டணம், 30 ரூபாயை செலுத்தி, நேரில்

அல்லது தபால் மூலம் அனுப்பி, விதை பரிசோதனை செய்து, அதிக மகசூல் பெறலாம்.இவ்வாறு அவர் கூறிஉள்ளார்.

## உழவர் மன்றம் சார்பில் மீன் விற்பனை துவக்கம்

சென்னிமலை: பெருந்துறை ஒன்றியம், நல்லாம்பட்டியில் செயல்படும் பொன்னர் சங்கர் உழவர் மன்றம் சார்பாக குளம் ஏலம் எடுத்து, மீன் வளர்க்கின்றனர். இந்த மீன்களை நேரடியாக குறைந்த விலைக்கு விற்பனை செய்யும் முயற்சியில் மீன் விற்பனை நிலையம் தொடங்கப்பட்டது. தொடக்க விழா நேற்று நடந்தது. அஸ்வத் தொண்டு நிறுவன தலைவர் செல்வராஜ் தலைமை வகித்தார். முதல் விற்பனையை ஈரோடு மாவட்ட நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் சந்தானம் தொடங்கி வைத்து பேசியதாவது: உழவர் மன்றங்கள் இது போன்று விவசாயம் சார்ந்த தொழில் தொடங்க முன்வர வேண்டும். இதனால், விவசாயிகளுக்கு லாபகரமாக இருப்பது மட்டுமின்றி, மக்களுக்கும் குறைந்த விலையில் தரமான பொருட்கள் கிடைக்கும். இது போன்று செயல்படுபவர்களுக்கு நபார்டு வங்கி தேவையான உதவிகளை செய்கிறது. இதை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். விழாவில் உழவர் மன்ற நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## அழிவின் பிடியில் 'ஊட்டி பிளம்ஸ்' குறைந்த விளைச்சலால் கிராக்கி

ஊட்டி:ஊட்டியில் அழிவின் பிடியில் உள்ள பிளம்ஸ், குறைந்தளவு விளைந்துள்ளதால், கிராக்கி அதிகரித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில், ஊட்டி, குன்னூர், கோத்தகிரி பகுதிகளில், பேரிக்காய், பீச், ஸ்ட்ராபெர்ரி, ஆரஞ்சு, பிளம்ஸ், பப்ளிமாஸ், பப்பினோ, 'பேசன் ப்ரூட்' உட்பட பல அரிய வகை பழங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இவற்றில்,'ஊட்டி பிளம்ஸ்' வகைகளுக்கு, சுற்றுலா பயணிகள் மத்தியில் கிராக்கி உள்ளது. ஆனால், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இதன் விளைச்சல் மிகவும் குறைந்து காணப்படுவதால், சில பகுதிகளில் இருந்து மட்டும், ஊட்டி பிளம்ஸ் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டுள்ளது. இத னால், இதன் விலையும் அதிகரித்து வருகிறது.

தற்போது, ஒரு கிலோ பிளம்ஸ், 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இவற்றை ஆர்வத்துடன் சுற்றுலா பயணிகள் வாங்கி செல்கின்றனர்.

## மூன்று மாதம் வரை வாடாமல் இருக்கும் 'ஆர்கிட்' மலர்கள்

கூடலுார்:'கூடலுார், நாடுகாணி ஜீன்பூல் தாவரவியல் மையத்தில் பூத்துள்ள'ஆர்கிட்' மலர்கள், மூன்று மாதங்கள் வரை வாடாமல் இருக்கும்' என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம், கூடலுார், நாடுகாணியில் வனத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள, ஜீன்பூல் தாவரவியல் (மரபணு பூங்கா) மையத்தில், பல வகையான தாவரங்கள், அதன், தாவர குடும்பம் வாரியாக, நடவு செய்து, பராமரிக்கப்பட்டு வருகிறது.இதில், ஒரு வாரம் முதல், மூன்று மாதம் வரை வாடாமல் இருக்கும், 70 வகையான,'ஆர்கிட்' மலர்களும், பசுமை குடில்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன.அதில், சில செடிகளில் மலர்கள் பூத்துள்ளன. இந்த மலர்கள், குறைந்த பட்சம், ஒரு மாதம் முதல்; அதிகபட்சம், மூன்று மாதம் வரையில் வாடாமல் இருக்கும் என, இங்குள்ள நிர்வாகிகள் தெரிவித்தனர்.வனத்துறையினர் கூறுகையில், 'வரும் கோடை விடுமுறையில், பள்ளி மாணவர்கள், இங்கு வந்தால், ஆர்கிட் மலர் செடிகள் உள்ளிட்ட பல அரிய வகை தாவரங்களை, பார்த்து ரசிப்பதுடன், அவைகள் குறித்த விபரங்களையும் ஒரே இடத்தில் தெரிந்து கொள்ள முடியும். அவை எதிர்கால கல்விக்கு உதவியாக இருக்கும்' என்றனர்.

## ஒட்டன்சத்திரத்தில் முருங்கை கிலோ ரூ.9

ஒட்டன்சத்திரம்: வரத்து தொடர்ந்து அதிகமாக இருப்பதால், ஒட்டன்சத்திரத்தில் முருங்கை கிலோ ரூ.9க்கு விற்கப்பட்டது.
ஒட்டன்சத்திரம் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் விளையும் செடி முருங்கை இங்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. கடந்த 3 மாதங்களுக்கு முன்பு பெய்த தொடர்மழை காரணமாக முருங்கை விளைச்சல் பாதிக்கப்பட்டது.

அப்போது பரோடா பகுதியில் விளைந்த முருங்கை இங்கு லாரிகள் மூலம் கொண்டு வரப்பட்டு கிலோ ரூ.100 க்கும் மேல் விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தற்போது உள்ளூர் மற்றும் பக்கத்து மாவடங்களில் முருங்கை அறுவடை செய்யப்பட்டு வருவதால், மார்க்கெட்டில் வரத்து இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது.
இதன் காரணமாக முருங்கை
விலை தொடர்ந்து இறங்குமாகவே உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு கிலோ ரூ.20க்கும் மேல் விற்றது. இது படிப்படியாக குறைந்து ரூ.12 க்கு விற்றது.
இந்நிலையில் இந்த வாரம் இதன் விலை மேலும் சரிவடைந்து ரூ.10க்கும் கீழ் சென்றது. நேற்று செடிமுருங்கை கிலோ ரூ.9 க்கு விற்றது.
வியாபாரி ஒருவர் கூறுகையில்,
""வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், முருங்கை விலை இன்னும் குறைய வாய்ப்புள்ளது," என்றார்.

## மலைப்பகுதியில் மிளகு சீசன் துவக்கம்

தாண்டிக்குடி:தாண்டிக்குடி தடியன்குடிசை பகுதியில் மிளகு சீசன் துவங்கியுள்ளதால், அவற்றை பறிக்கும் பணியில் தொழிலாளார்கள் ஈடுபட்டுள்ளனர்.

இம்மலைப்பகுதியில் தடியன்குடிசை, புல்லாவெளி, பூலத்தூர், கும்பறையூர், கே.சி.பட்டி, காமனூர் பகுதியில் ஏராளமான ஏக்கர் பரப்பில் மிளகு விவசாயம் செய்யப்படுகிறது. மார்ச்சில் துவங்கியுள்ள சீசன் முதல் போகம் ஜூன் வரை நீடிக்கும். மலைப்பகுதியில் வாட்டி, வதைக்கும் கோடை வெயிலால் மிளகு கொடிகள் காய்ந்தும், வாடல் நோய் தாக்குதலால் பாதித்துள்ளது. கொடிகள் பழுப்பு நிறத்தில் திரட்சியற்ற சரங்களாக இருக்கிறது. இந்தாண்டு போதிய பருவமழை கிடைத்தாலும், தற்போதைய வறண்ட வானிலை அனைத்து மலைப்பயிர்களின் வளர்ச்சியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் கொடிகளில் விளைந்துள்ள மிளகுகளை பறிக்கும் பணியும் துவங்கியுள்ளது.இதில் ஏராளமான தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து மிளகு பறிக்கும் தொழிலாளார் கூறுகையில்: மரங்களில் படர்ந்துள்ள மிளகு சரங்களை ஏணிகள் மூலம் பறிக்கிறோம். நாளொன்றுக்கு 50 கிலோ மிளகு எடுக்கலாம். இதற்கு கூலியாக ரூ.500 வழங்கப்படுகிறது.

இந்தாண்டு துவக்கத்தில் நல்ல மழை பெய்தது. இதனால் விளைச்சலும், லாபமும் அதிகரிக்கும் என நம்பினர். வழக்கமாக பெய்யும் கோடை மழை இந்தாண்டு இல்லாததால் கடும் வறட்சி நிலவுகிறது. இதனால் மிளகில் பூச்சி தாக்கி விளைச்சல் அளவு குறைந்துள்ளது. விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர், என்றார்

## தென்னங் கிடுகு, துடைப்பம் தயாரித்து வருவாய் ஈட்டும் பெண்கள்

தேனி: தேனி அருகே தென்னங்கீற்றில் இருந்து கிடுகு மற்றும் துடைப்பம் தயாரிக்கும் பணியில் ஏராளமான பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.

போடி ரோட்டில் உள்ளது மீனாட்சிபுரம் விலக்கு. இக் கிராம மக்கள் தென்னங்கிடுகு தயாரிப்பில் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர். கொளுத்தும் கோடை வெயிலுக்கு இதமளிக்கும் வகையில் தென்னையில் கிடுகு பின்னுதல், துடைப்பம் தயார் செய்வதில் ஆர்வமாக உள்ளனர். தற்போது, சீதோஷண நிலை மாறியுள்ளதால், தென்னங்ற கிடுக்கும் நல்ல வரவேற்பு உள்ளது. தேனி, போடி, கம்பம் பகுதிகளில் இருந்து மொத்த வியாபாரிகள் இங்கு வந்து கிடுகுகள், துடைப்பங்கள் மொத்த எண்ணிக்கையில் வாங்கிச் செல்கின்றனர்.

* தொழிலாளி வீரம்மாள் கூறுகையில், "" 10 ஆண்டுகளுக்கும் மேலாக தென்னங் கீற்றில் இருந்து கிடுகு மற்றும் துடைப்பம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளேன். காலையில் வீட்டு வேலைகள் முடிந்ததும், இப்பணியில் ஈடுபடுவேன். நாளொன்று 50 துடைப்பம் தயாரிக்கிறேன்.

ஒரு துடைப்பம் ரூ. 5க்கு விற்கிறோம். மொத்த வியாரிகள் பத்து நாட்களுக்கு ஒரு முறை இங்கு வந்து வாங்கிச் செல்கின்றனர்.

இத்தொழில் மூலம் மாதம் ந்தோறும் ரூ. 4,000 வரை சம்பாதிக்கிறேன். இப்பணம் அன்றாட தேவைகளுக்கு பயன்படுத்தி வருகிறேன்", என்றார்

**மகிழ்ச்சி தரும் வீட்டு தோட்ட பராமரிப்பு**

மரங்கள் மனிதனையும், பூமியையும் பாதுகாப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது.

மனிதன் வாழவும், இயற்கை வளம் பாதுகாக்க, உயிரினங்கள் என அனைத்திற்கும் அடிப்படை மரம். ஆலை தொழில்களும், வாகன பெருக்கமும் வெளி மண்டலத்தில் கார்பன் அதிகரித்து பூமி வெப்பமாக்கி வருகிறது. எனவே மரம் வளர்த்து பூமியை பாதுகாப்பதின் அவசியத்தை உணர்ந்து ஒரு குடும்பத்திற்கு ஒரு த்மரம் வளர்ப்போம்.

செயல்படாத திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்: தேனி நகராட்சியில் தினமும் சேரும் 40 டன் குப்பையினை திடக்கழிவு மேலாண்மை திட்டம் மூலம் குப்பையினை தரம் பிரிக்க தப்புக்குண்டு ரோட்டில் "வளங்கள் மீட்பு பூங்கா' 10 ஏக்கரில் அமைத்துள்ளனர். தேனியில் சேரும் குப்பையினை வாகங்களில் எடுத்து சென்று, மக்கும், மக்காத குப்பை என பிரித்து அதில் இயற்கை உரம் தயாரிப்பு திட்டம் செயல் படுத்த வேண்டும். ஆனால் நகராட்சியில் குப்பையினை முறைப்படுத்தி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த உருப்படியாக எதுவும் செய்ய வில்லை.

குபையை கொட்டி விட்டு வருகின்றனர். அதில் தீ பிடித்து நாள் முழுவதும் எரிந்து ஒரே புகைமூட்டமாகவே இருக்கும். இதனால் அப்பகுதியில் செல்வோர் மூச்சு திணறல், சுவாச கோளாறுகளால் பாதிக்கப்படுகின்றனர்.

டாக்டர். ராஜசேகரன்தேனி

தேனி அரண்மனைப்புதூர், ஹவுசிங் போர்டில் வசிப்பவர் டாக்டர் ராஜசேகரன். எனது மனைவி கவிதாவிற்கு தோட்ட பராமரிப்பு பிரதான பொழுது போக்கு. எனவே, புதுவீடு கட்டும் முன் அதில் தோட்டம் அமைக்க திட்டமிட்டு மரக்கன்றுகளும், வீட்டை சுற்றி செடி, கொடி, அழகு செடிகள் நட்டனர். வீடு கட்டி முடித்து ஒரு ஆண்டில் வீட்டை சுற்றி பூத்து குலுங்கும் மலர்கள், சுவர்களை தழுவி வளரும் கொடிகளும், மரங்களில் விளையும் கனிகள் கண்களுக்கு விருந்தாகி பசுமை குடிலாக காட்சியளிக்கிறது. மல்லி, முல்லை, கனகாம்பரம், ரோஜா, மனோரஞ்சிதம் என மனம் வீசுகிறது. ஜாதிக்காய், வசம்பு, கிராம்பு,

வெற்றிலை, ஓமம், தூதுவளை போன்ற மருந்துவ செடிகளும், வாழை, நெல்லி, கொய்யா, பப்பாளி, சப்போட்டோ மரங்களும் நமக்கு ஆரோக்கிய வாழ்விற்கு உதவும்.

இதை பராமரிப்பதற்கு தினமும் ஒரு மணி நேரம் செலவழிப்போம், 15 நாட்களுக்கு ஒரு முறை இயற்கை உரம் மிடுவோம், என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### போச்சம்பள்ளியில் கடும் வெயில் மரத்திலிருந்து வெதும்பி விழும் மாம்பிஞ்சுகள்

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளியில், கடும் வெயில் நிலவுவதால், மரத்திலிருந்து மாம்பிஞ்சுகள் வெதும்பி கீழே விழுவதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 47 ஆயிரம் ஹெக்டர் பரபரப்பளவில் மா சாகுபடி செய்யபடுகிறது. மா உற்பத்தியில் போச்சம்பள்ளி தாலுகா மாவட்டத்தில் 2ம் இடம் வகிக்கிறது. போச்சம்பள்ளி, சந்தூர், தாதம்பட்டி, புலியூர், மத்தூர், தொகரப்பள்ளி, வேலம்பட்டி, மாவுத்தூர், ஐகுந்தம் உள்ளிட்ட பகுதியில் அதிகம் பயிரிடப்பட்டுள்ளது. இங்கு தோத்தபுரி, பங்கனப்பள்ளி, மல்கோவா, பீத்தர், செந்தூரா, நீலம், அல்போன்சா உள்ளிட்ட ரகங்கள் சாகுபடி செய்யப்படுகிறது.

மத்திய பருவ ரகங்களான பெங்களூரா, பங்கனப்பள்ளி, அல்போன்சா போன்றவற்றில் தற்போது பிஞ்சுகள் விட ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் தற்போது அடிக்கும் வெயிலுக்கு தோட்டத்தில் உள்ள மா பிஞ்சுகள் வெதும்பி கீழே விழுந்து வருகிறது. இதனால் விவசாயிகள், குத்தகை வியாபாரிகள் பெரும் கவலையில் உள்ளனர். மா மரங்களில் மிஞ்சியுள்ள பிஞ்சுகளையாவது காப்பற்ற விவசாயிகள், டிராக்டர் மூலம்

தண்ணீரை விலை கொடுத்து வாங்கி மரங்களுக்கு ஊற்றி காப்பாற்றி வருகின்றனர். மழை பெய்தால் மட்டுமே இந்த வருடம் மா விளைச்சல் நன்றாக இருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி 29ம் தேதி நடக்கிறது

நாமக்கல், : நாமக்கல்லில் வரும் 29ம் தேதி நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்து இலவச பயிற்சி முகாம் நடைபெறுகிறது. நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையக்கில் வரும் 29ம் கேகி, காலை 9 மணிக்கு நாட்டுக்கோழி வளர்ப்பு என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது. இதில் நாட்டுக்கோழி ரகங்கள், வளர்ப்பு முறைகள், கீவன அளவுகள், குஞ்சு பொரிக்கும் விகம், குஞ்சு பொரிப்பான்களின் பயன்கள் குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது.விருப்பம் உள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 28ம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். இத்தகவலை திட்ட ஒருங்கிணைப்பாளர் அகிலா தெரிவித்துள்ளார்.

## அரூர் பகுதியில் நாக்பூர் ஆரஞ்சு விற்பனை

அரூர், : அரூர் பகுதியில் நாக்பூர் ஆரஞ்சு வரத்து அதிகரித்துள்ளதால், கூவிகூவி விற்கப்படுகிறது. ஒருகிலோ ரூ. 30க்கு விற்கப்படுவதால், பொதுமக்கள் அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர்.நாக்பூர் மாநிலத்தில் ஆரஞ்சு அறுவடை மும்முரமாக நடந்து வருவதால், தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கு அதிகளவில் விற்பனைக்கு வந்துள்ளன. இதன்படி தர்மபுரி மாவட்டம் அரூர், மொரப்பூர், கம்பைநல்லூர் பகுதியில் சாலையோரங்களிலும், தள்ளு வண்டிகளிலும் ஆரஞ்சு பழங்கள் குவித்து வைக்கப்பட்டு மும்முரமாக விற்பனை செய்யப்படுகிறது.

இதேபோல், அரூர் சந்தை மற்றும் மொரப்பூர் பகுதிகளிலும் சுமார் 20 மேற்பட்ட வாகனங்களில் ஆரஞ்சு பழங்கள் குவித்து வைத்து கூவிகூவி விற்கப்படுகிறது. ஒரு கிலோ ரூ.30க்கு விற்கப்படுவதால், பொதுமக்கள் கடைகளை மொய்த்தபடி விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.வயிறு சம்பந்தமான பிரச்னைகளுக்கு ஆரஞ்சுக்கு நிகர் ஏதும் இல்லை

என்பதால், மருத்துவர்கள் இதனை அதிக அளவில் உணவில் சேர்த்து கொள்ள பரிந்துரைக்கின்றனர். இதனால் கர்ப்பிணி பெண்கள், நோயாளிகள் உள்பட அனைத்து தரப்பினரும் அதிக அளவில் ஆரஞ்சு பழங்களை வாங்கிச் செல்கின்றனர்.

**பவானிசாகர் அணை சீரமைப்பு பணி துவக்கம்**

சத்தியமங்கலம்,:பவானிசாகர் அணையானது ரூ.19.71 கோடி மதிப்பில் சீரமைக்கப்பட உள்ளது. இதற்கான பணி தொடங்கியது. ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் தாலூகாவில் பவானிசாகர் அணை அமைந்துள்ளது. ஈரோடு மாவட்டத்தின் முக்கிய நீராதாரமாக விளங்கும் இந்த அணையின் மூலம் ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 2.50 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. தமிழகத்தில் மேட்டுர் அணைக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய அணை பவானிசாகர் அணையாகும்.

தெற்காசியாவின் இரண்டாவது பெரிய மண்அணை என்ற பெருமையை பெற்ற இந்த அணை இந்தியா சுதந்திரம் பெற்ற பின் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் 1948ம் ஆண்டு கட்டத்தொடங்கி 1954 ல் பணி நிறைவு பெற்றது. 9 கி.மீ நீளமுள்ள கரையை கொண்ட அணையின் கட்டுமான பணிக்கு செலவிடப்பட்ட தொகை ரூ.10.50 கோடி. பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த அணையில் கடந்த திமுக ஆட்சிக்காலத்தில் ரு.7 கோடி செலவில் மேம்பாட்டுபணி நடைபெற்றது. அதன்பின் தற்போது ரு.19.71 கோடி செலவில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுபணி தொடங்கியுள்ளது. அணையின் கரைகளை பலப்படுத்துதல், அணைப்பகுதியில் உள்ள சாலைகளை மேம்பாடு செய்தல், மதகுகளை சீரமைத்தல், தடுப்புச்சுவர் பலப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணி மேற்கொள்ளப்படவுள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பணியில் வடமாநில கூலிதொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். தொழிலாளர்கள் அணையின் மேற்பகுதியில் கேண்ட்ரி ஹவுஸ் அருகே கூடாரம் அமைத்து தங்கியுள்ளனர். அணையின் நீர்மட்டம் தற்போது

48.39 அடியாக உள்ளதால் அணையின் கரையை பலப்படுத்தும் பணி மற்றும் மதகுகளை சீரமைக்கும் பணியை முதலில் மேற்கொள்ள உள்ளதாக ஒப்பந்த நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

## கொய்மலர் உற்பத்தியில் தீவிரம் காட்டும் விவசாயிகள்

ஊட்டி, : நீலகிரி மாவட்டக்கில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பசுந்தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதனை தொடர்ந்து மாற்று பயிராக மலர் சாகுபடி செய்ய அரசு விவசாயிகளை ஊக்குவித்தது.

கொய்மலர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு தேவையான கடன் உதவிகள் மற்றும் நாற்றுகள் தோட்டக்கலைத்துறை சார்பில் வழங்கப்பட்டது. பல விவசாயிகள் வங்கி மூலம் கடன் பெற்று மலர் சாகுபடியில் ஈடுபட்டனர். தரமான நாற்றுகள் கிடைக்காதது, உற்பத்தி செய்யப்பட்ட மலர்களை சந்தைப்படுத்த முடியாதது போன்ற காரணங்களால் நஷ்டத்திற்கு தள்ளப்பட்டதாக விவசாயிகள் சிலர் கூறி வருகின்றனர்.

ஒரு சில பகுதிகளில் விவசாயிகள் தொடர்ந்து பசுமை குடில்கள் அமைத்து கொய்மலர் சாகுபடி செய்து வருகின்றனர். ஊட்டி அருகே கொதுமுடி உள்ளிட்ட பகுதிகளில் ஒரு சில விவசாயிகள் பசுமை குடில்கள் அமைத்து கொய்மலர் சாகுபடி செய்து வருகின்றனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் மலர்களுக்கு பெங்களூர், மைசூர் போன்ற பகுதிகளில் நல்ல வரவேற்பு உள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். 10 மலர் கொண்ட ஒரு கொத்து ரூ.50க்கு விற்பனை செய்யப்படுகிறது என விவசாயிகள் கூறியள்ளனர்.

## தொடர் மின்வெட்டால் கோடை சாகுபடி பாதிப்பு

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதிகளான பள்ளத்தூர், ஆண்டிக்காடு, இரண்டாம்புளிக்காடு, நாடியம், குருவக்கரம்பை, மருங்கப்பள்ளம், மரக்காவலசை, வீரியங்கோட்டை, முடச்சிக்காடு, கைவனவயல், பூக்கொல்லை, கழனிவாசல் உட்பட பல்வேறு பகுதிகளில் ஒரு போகம் சம்பா சாகுபடி மட்டுமே

நடைபெறுவது வழக்கம். அதேநேரம் கோடையில் 100 ஹெக்டேருக்குமேல் கோடை சாகுபடி செய்வதும் உண்டு. மும்முனை மின்சாரம் 10 முதல் 12 மணி நேரம் வரை வழங்கப்பட்டு வந்தது. இந்த மின்சாரத்தை நம்பி கோடை சாகுபடி செய்வோம் என்ற நம்பிக்கையில் பல்வேறு பகுதிகளில் நாற்று விடப்பட்டது.

ஆனால் திடீரென கடந்தத 15 நாட்களுக்கு மேலாக மும்முனை மின்சாரம் எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் 3 மணி முதல் 6 மணி நேரம் கூட முழுமையாக கிடைக்கவில்லை. இதனால் கோடை சாகுபடிக்கு விடப்பட்ட நாற்றுகள் அனைத்தும் நடவு செய்ய முடியாமல் பல்வேறு இடங்களில் மாடு விட்டு மேய்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கடைமடை பகுதியில் ஆண்டுதோறும் 100 ஹெக்டேருக்குமேல் கோடை சாகுபடி செய்வது வழக்கம்.

ஆனால் இந்தாண்டு இதுவரை 15 ஹெக்டேர் நிலப்பரப்பில் மட்டுமே கோடை சாகுபடி நடந்துள்ளது. அதுவும் முழுமை பெறுமா என்பது சந்தேகமே என விவசாயிகள் கூறுகின்றனர். அதேநேரம் மார்கழி, தை மாதங்களில் தென்னைக்கு விவசாயிகள் உரம் வைப்பது வழக்கம். அதேபோல் இந்தாண்டு மார்கழி, தை மாதங்களில் உரம் வைக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு கோடையில் தண்ணீர் பாய்ச்சுவதற்கு போதுமான மின்சாரம் கிடைக்காததால் தென்னை மரங்களும் வாடி வதங்க துவங்கியுள்ளது.

### சினை மாடுகள் பராமரிப்பு பயிற்சி

நாகை, : நாகை வெளிப்பாளையம் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை கழகத்தின் கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், வருகிற 30ம் தேதி காலை 9.30 மணி அளவில் சினை மாடுகள் பராமரிப்பு என்ற தலைப்பில் இலவச ஒரு நாள் பயிற்சி நடைபெற உள்ளது. பயிற்சியில், சினைமாடுகள் பராமரிப்பு, தீவன மேலாண்மை, சினை மாடுகளில் ஏற்படும் கருப்பை பிரச்னைகள், கருச்சிதைவு போன்ற தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற விரும்புவோர் 04365 247123 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளும்படி நாகை கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

## கொளுத்தும் வெயிலுக்கு வெள்ளரி விற்பனை அமோகம்

திருப்புத்தூர், : சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூரில் கொளுத்தும் வெய்யிலுக்கு வெள்ளரி பிஞ்சு விற்பனை அமோகமாக நடைபெறுகிறது.இந்த வருடம் வழக்கத்திற்கு மாறாக ஜனவரி மாதம் முதலே வெய்யிலின் தாக்கம் சற்று அதிகமாகவே இருந்து வருகிறது. இதனால் மக்கள் தண்ணீரையும், தண்ணீர்ச்சத்து நிறைந்த வெள்ளரிக்காய், தர்பூசணி மற்றும் இளநீர் உள்ளிட்டவைகளை அதிகமாக பயன்படுத்துகின்றனர். திருப்புத்தூர் பஸ் ஸ்டாண்டில் வெள்ளரி பிஞ்சு விற்பனை கடந்த சில வாரங்களாக படுஜோராக நடக்கிறது. புதுக்கோட்டை மாவட்டம் திருமயம், ஓசுவிலான்பட்டி, பாப்பான்பட்டி, கோவில்பட்டி, மோணங்குடி, உக்தணக்கோட்டை, மளவளங்கரை உள்ளிட்ட பல கிராமங்களைச்சேர்ந்த பெண்கள் மற்றும் ஆண்கள் 15க்கும் மேற்பட்டோர் திருப்புத்தூர் பஸ் ஸ்டாண்டில் வெள்ளரி விற்கின்றனர்.

மளவளங்கரையைச்சேர்ந்த ராமன் கூறுகையில், நான் பல வருடங்களாக இத்தொழில் செய்து வருகிறேன். நாங்கள் புதுக்கோட்டை, திருமயத்தில் கூடை கணக்கில் வெள்ளரிக்காய்யை மொத்தமாக விலைக்கு வாங்குகின்றோம். அதை இங்கு கொண்டு வந்து சைஸ் வாரியாக பிரித்து ஒரு கட்டு ரூ.10க்கு விற்கிறோம். பிப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரை வெள்ளரிக்காய் சீசன் இருக்கும். சீசனுக்கு மட்டும் தான் இந்த வேலைக்கு வருவோம். மற்ற நேரங்களில் கூலி வேலைக்கும், வயல் வேலைக்கும் சென்று விடுவோம் என்றார்.

**பாவூர்சத்திரம் மார்க்கெட்டில் எலுமிச்சை, மல்லி விலை திடீர் உயர்வு**

பாவூர்சத்திரம், : பாவூர்சத்திரம் மார்க்கெட்டில் எலுமிச்சை மற்றும் மல்லி விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். பாவூர்சத்திரம் காமராஜர் தினசரி மார்க்கெட்டிற்கு ஆலங்குளம் அருகேயுள்ள ஐந்தாம்கட்டளை, கல்லூத்து, மேலகிருஷ்ணப்பேரி, கடையம், சேர்வைக்காரன்பட்டி, ராஜாங்கபுரம் பகுதிகளில் இருந்து எலுமிச்சை விவசாயிகளால் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இங்கு விற்கப்படும் எலுமிச்சைகள் பெரும்பகுதி கேரளாவிற்கும், உள்ளூர் மாவட்டத்திற்கும் விற்கப்படுகிறது. தற்போது மாவட்டத்தில் கோடை வெயில் கடுமையாக இருப்பதால் சிறுகடை உரிமையாளர்கள் சர்பத் மற்றும் ஜூஸ் போடுவதற்கும், கேரளாவிற்கும் எலுமிச்சையை பெருமளவில் வாங்கி செல்கின்றனர். கடந்த வாரம் விற்பனையில் மந்தம் ஏற்பட்டு எலுமிச்சை விலை கிலோ ஒன்றுக்கு ரூ.50 முதல் 65க்கும் விற்கப்பட்டது.

ஆனால் நேற்று பாவூர்சத்திரம் மார்க்கெட்டிற்கு எலுமிச்சை வரத்து அதிகரித்து இருந்தாலும் விற்பனையில் ஏற்றம் ஏற்பட்டு கிலோ ஒன்றுக்கு ரூ.90 முதல் 100 வரை விற்பனையானது. இதேபோல் வெயில் தாக்கம் மற்றும் நோய் தாக்குதலால் மல்லி வரத்து குறைந்த அளவே விற்பனைக்கு வருகிறது. இதனால் கடந்த வாரம் மல்லி கிலோ ரூ.5 முதல் ரூ.8 வரை விற்ற மல்லி நேற்று திடீரென விலை அதிகரித்து கிலோ ஒன்றுக்கு ரூ.35 முதல் 40 வரை விற்பனையானது. இந்த விலை ஏற்றத்தால் எலுமிச்சை மற்றும் மல்லி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## உளுந்து சாகுபடி செய்வது எப்படி?

நாகர்கோவில், :நாகர்கோவில் வேளாண்மை இணை இயக்குநர் இளங்கோ விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: குமரி மாவட்டத்தில் தற்போது உளுந்து சாகுபடி செய்ய ஏற்ற காலமாகும். உளுந்தில் ஏடிற்றி 3, ஏடிற்றி 4, ஏடிற்றி 5, வம்பன் 5 ஆகிய ரகங்கள் உள்ளன. ஹெக்டேருக்கு 20 கிலோ வீதம் பயிரிடலாம். பயிரிடும் போது ஒரு கிலோ விதைக்கு ட்ரைகோடெர்மாவிரிடி 4 கிராம் அல்லது சூடோமோனாஸ் 10 கிராம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

பின்னர் ரைசோபியம் 3 பாக்கெட், பாஸ்போபாக்டீரியா கஞ்சி கலந்து ஒரு ஹெக்டேருக்கான விதையை நேர்த்தி செய்யவேண்டும். தொடர் பயிரிடும் முறையில் உகந்த மண் ஈரப்பதத்தில் நெற்பயிரின் அறுவடைக்கு 5 நாளில் இருந்து 10 நாட்களுக்கு முன்னரே விதைகளை விதைக்க வேண்டும். அறுவடை இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் பகுதிகளில் நெற்பயிரை இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் முன்னரே விதைகளை விதைக்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அந்தியூர் சந்தையில் சிந்து மாடு ரூ.50 ஆயிரத்துக்கு விற்பனை



அந்தியூர் சந்தையில் சிந்து மாடு ஒன்று ரூ.50 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

மாட்டுச்சந்தை

அந்தியூர் சந்தையில் வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமை மாட்டுச்சந்தை நடைபெறும். அதன்படி நேற்று அந்தியூரில் மாட்டுச்சந்தை நடந்தது. இந்த சந்தைக்கு அந்தியூர், பர்கூர், தேவர்மலை, ஈரோடு, கோபி, சத்தியமங்கலம், டி.என்.பாளையம், நாமக்கல், சேலம், மேட்டூர், பண்ணவாடி, கொளத்தூர், இடைப்பாடி, கொங்கணாபுரம், கோவை,

மேட்டுப்பாளையம், அன்னூர், திருப்பூர், கர்நாடக மாநிலம் வேளாம்பட்டி, மாதேஸ்வரன் மலை, ராமபுரம், கர்காகண்டி உள்பட பல பகுதிகளில் இருந்து ஏராளமான விவசாயிகள் மாடுகளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.

ரூ.50 ஆயிரத்துக்கு..

நேற்று நடந்த சந்தையில் கொங்கன் இன பசு மாடு ஜோடி ரூ.35 ஆயிரம் முதல் ரூ.60 ஆயிரம் வரையும், பர்கூர் இன செம்மை நிறமாடு ஒன்று ரூ.20 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரையும் விலை போனது. சிந்து இன மாடு ஒன்று ரூ.25 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரையும், ஜெர்சி இன மாடு ஒன்று ரூ.20 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரையும் விற்பனை ஆனது. நாட்டு பசு மாடு ஒன்று ரூ.20 ஆயிரத்தில் இருந்து ரூ.40 ஆயிரம் வரையும், எருமை மாடு ஒன்று ரூ.25 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரையும், கன்று குட்டி ஒன்று ரூ.5 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரையும் விற்பனை ஆனது.

ஈரோடு, சேலம், நாமக்கல், திருப்பூர், மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, கேரளா மற்றும் கர்நாடக மாநிலத்தை சேர்ந்த ஏராளமான வியாபாரிகள் இங்கு வந்து மாடுகளை வாங்கிச்சென்றனர்.

**விதையில்லா திராட்சை வரத்து எதிரொலி: கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் கருப்பு திராட்சை விலை குறைவு கிலோ ரூ.35–க்கு விற்பனை**



உத்தமபாளையம்,

விதையில்லா திராட்சை வரத்து எதிரொலியாக கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் கருப்பு திராட்சை விலை குறைந்தது. ஒரு கிலோ ரூ.35–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கருப்பு திராட்சை

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் நெல், வாழை, தென்னை விவசாயத்திற்கு அடுத்தபடியாக கருப்பு திராட்சை விவசாயம் நடைபெற்று வருகிறது. காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, ராயப்பன்பட்டி, அணைப்பட்டி, ஆனைமலையன்பட்டி, க.புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் கருப்பு பன்னீர் திராட்சை விவசாயம் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டிலேயே ஆண்டு தோறும் திராட்சை பழம் கிடைக்கும் இடமாக கம்பம் பள்ளத்தாக்கு பகுதி விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது. தற்போது

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் அனல்காற்றுடன் வெயில் கொளுத்தி வருகிறது. இதனால் திராட்சை பழங்களை கொள்முதல் செய்ய வியாபாரிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

விலை குறைந்தது

கடந்த கோடை காலங்களில் ஒரு கிலோ திராட்சை ரூ.50–க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தற்போது ஒரு கிலோ ரூ.30 முதல் ரூ.35–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை சீரானது என்றாலும் இந்த பகுதியில் திராட்சை வரத்து குறைவாக இருக்கிறது.

இதுகுறித்து திராட்சை வியாபாரிகள் கூறும்போது, தமிழகம் மற்றும் கேரள மாநிலத்திற்கு விதையில்லா திராட்சை பழங்கள் மராட்டிய மாநிலத்தில் இருந்து அதிக அளவில் வரத்தொடங்கி உள்ளன. குறிப்பாக மதுரை, திருச்சி, கோவை உள்ளிட்ட நகரங்களில் கூடுதல் வரத்து காரணமாக கம்பம் பள்ளத்தாக்கு பகுதி கருப்பு திராட்சைக்கு போதிய விலை கிடைக்கவில்லை, என்றனர்.